கொடுக்க வேண்டியிருப்பதால்தான், நம்முடைய துறையிலே போதுமான பண வசதி இருக்கின்ற காரணத்தால் அங்கங்கு கட்டிடங்கள் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Jagannatha Nagar Sundara Vinayagar Koil

* 72 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the "Kreedam" of Sundara Vinayagar Koil at Jagannatha Nagar, Arumbakkam was reported to the police to be lost about December 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ரூ. 30 மதிப்புடைய வெள்ளி முலாம் பூசப்பட்ட கிரீடம் களவாடப்பட்டது. இதுபற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

Kumbakonam Sarangapani temple car

* 73 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether steps have been taken to run the temple car of Sri Sarangapani Devasthanam at Kumbakonam during 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இத்திருக்கோயிலின் தேரினை அரசு தொழில் நுட்ப அலுவலர்கள் பார்வையிட்டு அதனைத் தற்போதைய சூழ்நிலைகளுக்கேற்பப் புதுப்பித்து, மீண்டும் ஓட விடுவதற்குரிய சாத்தியக் கூறுகளையும், வழிமுறைகளையும் ஆராய்ந்து வருகின்றனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப்பட்ட பழம்பெரும் தேர்களை எல்லாம் ஏதோ ஏலம் விடப்போகிறுர்கள் என்ற செய்தியைப் பார்த்தோம். இப்படி ஏலம் விட்டால் பழைய கலைப் பொருள்களை நாம் இழந்து விடுவோம். ஆகவே, அப்படிப்